Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 125 | சனிக்கிழமை Saturday | 07.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# 2030க்குள் கிராமப்பகுதிகளில் 5 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும்

## முதலமைச்சர் ஸ்டாலின் வாக்குறுதி




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அனைத்து அரசு,அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 100சதவீதம் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும் என அறிவித்துள்ளார்.

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தமிழ்நாட்டின் அடுத்த 5 ஆண்டு வளர்ச்சிக்கான 14 அறிவிப்புகளை, Stalin Statement என்ற பெயரில் வெளியிட்டார்.

அதில், 2030–க்குள் கிராமப்பகுதிகளில் 5 லட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என்றும், நகர்ப்பகுதிகளில் 2 லட்சம் வீடுகள் கட்டப்படும் எனவும் முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார்.

அனைத்து அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 100 சதவீதம் ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்தார். 2030ஆம் ஆண்டுக்குள் 50 லட்சம் புதிய வேலைவாய்ப்பை உருவாக்குவதே இலக்கு என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

10 கிராமங்களில் உத்தமர் காந்தி திட்டம் தற்போதே செயல்படுத்தப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். இந்தியாவில் காந்தி பெயர் நீக்கப்பட்டு வரும் சூழலில், அவரது பெயரை இந்த திட்டத்திற்கு சூட்டி இருப்பதாக மு.க.ஸ்டாலின் கூறினார். மேலும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தொழிற்பயிற்சி மூலம் பொருளாதார மேம்பாடு உறுதிசெய்யப்படும் என்றும் முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார். எளிய மக்களின் அடிப்படைத் தேவையாக இருக்கும் வீட்டு வசதியை உறுதி செய்வதில் இத்திட்டம் பெரும் கவனம் செலுத்துகிறது. 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ், கிராமப்புறங்களில் 5 லட்சம் மற்றும் நகர்ப்புறங்களில் 2 லட்சம் என மொத்தம் 7 லட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட உள்ளன. குறிப்பாக, ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின குடும்பங்கள் அனைவருக்கும் 2030–க்குள் வீட்டுமனைப் பட்டா வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றி, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில் தேவையான இடங்களில் புதியவிடுதிகள் அமைக்கப்படவுள்ளன. தமிழக இளைஞர்களை உலகத்தரம் வாய்ந்தவர்களாக மாற்றும் நோக்கில், அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 100% ஸ்மார்ட் வகுப்பறைகள் உருவாக்கப்படும். 'நான் முதல்வன் 2.0' திட்டத்தின் மூலம் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதிநவீன தொழில் நுட்பப் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

உயர்கல்விக்காக அண்ணல் அம்பேத்கர் அயலகத் திட்டம் விரிவுபடுத்தப்படுவதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டு வேலைவாய்ப்புகள் உறுதிசெய்யப்படும்.

தமிழகத்தின் பொருளாதாரத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்ல,

சுமார் 50 லட்சம் இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவதே அரசின் முதன்மை இலக்காகும். தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்றுமதியை 6 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்துவதுடன், மாவட்டம்தோறும் நவீன தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு உலகளாவிய அங்கீகாரம் கிடைக்க பன்னாட்டு கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படும். ஜவுளி, தோல் மற்றும் கைத்தறித் துறைகளில் நவீன தொழில்நுட்பங்கள் புகுத்தப்பட்டு சர்வதேச அளவில் சந்தைப்படுத்தப்படும். விவசாயத் துறையில் தன்னிறைவு அடைய, நிகர சாகுபடி பரப்பை 50 லட்சம் ஏக்கராக உயர்த்தவும், உணவுப்பொருள் உற்பத்தியை 125 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இயற்கை வளத்தைப் பாதுகாக்க மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் 1,000 மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் உருவாக்கப்படும். அதேபோல், கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தியில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், தினசரி 4.5 கோடி லிட்டர் பால் உற்பத்தி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களை நகர்ப்புறங்களுக்கு இணையான வசதிகளுடன் கூடிய பொருளாதார மையங்களாக மாற்ற 'உத்தமர் காந்தி மாதிரி கிராமத் திட்டம்' முதற்கட்டமாக 10 ஊராட்சிகளில் தொடங்கப்பட உள்ளது. மாநகராட்சிகளில் நவீன வடிகால் வசதிகள், திடக்கழிவுமேலாண்மை மற்றும் கலை கலாச்சார மையங்கள் அமைக்கப்படும். மக்கள் நல்வாழ்வைப் பொறுத்தவரை, நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் போன்ற வாழ்வியல் நோய்களைக் கண்டறியசிறப்புமுகாம்களும், மனநல ஆலோசனைகளுக்காகத் தனி மையங்களும் ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படும்.

முடிவாக, தமிழகத்தின் ஆன்மீகச் சுற்றுலாத் தலங்கள் மற்றும் கடற்கரைச் சாலைகளை மேம்படுத்துவதுடன், மாநிலம் முழுவதையும் ஒரு 'பெரிய சமத்துவபுரமாக' மாற்றுவதே தனது இறுதி இலக்கு என்று முதல்வர் அறிவித்துள்ளார்.

பல்வேறு நிதி மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், இந்த தொலைநோக்குத் திட்டங்கள் தமிழ்நாட்டை 2030–க்குள் ஒரு பொற்காலத்தை நோக்கி அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

# மக்கள்தொகை கணக்கெடுப்பு தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு



மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக தமிழ்நாடு அரசு அரசாணையை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் வரும் ஜூலை 17– ஆம் தேதி தொடங்குகிறது. ஆகஸ்ட் 30– ஆம் தேதி வரை 45 நாட்களுக்கு முதற்கட்ட கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறுகிறது. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் முழுக்க முழுக்க டிஜிட்டல் முறையில் நடைபெறவுள்ளன.

அதேபோல் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியில் சுமார் 50,000 அரசு ஊழியர்கள் ஈடுபடவுள்ளனர். வீடு, வீடாகச் சென்று பொதுமக்களைச் சந்தித்து சொத்து, வாகனம், அடிப்படை வசதிகள், கழிப்பிடம் உள்ளதா?, வருமானம் என்ன? சைக்கிள் உள்ளதா? இருசக்கர வாகனம் உள்ளதா? கார் உள்ளதா? வாடகை வீடா? சொந்த வீடா? வீட்டில் பிரிட்ஜ் உள்ளதா? ஏசி உள்ளதா? உள்ளிட்ட 33 கேள்விகளைக் கேட்டு அவர்கள் அளிக்கும் பதிலை டிஜிட்டல் முறையில் பதிவுச் செய்யவுள்ளனர். மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கான ஊதியம் உள்ளிட்டவைகள் அடங்கிய அரசாணையாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

இதனிடையே, 2027–ஆம் ஆண்டிற்கான மக்கள்தொகை கணக்கெடுப்பை இரண்டு கட்டங்களாக நடத்த முடிவுச் செய்துள்ள மத்திய அரசு, இரண்டாம் கட்ட கணக்கெடுப்பைஅடுத்தஆண்டு பிப்ரவரி மாதம் நடத்துகிறது. நாடு முழுவதும் நடைபெறும் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணியில் 32 லட்சம் அரசு அலுவலர்கள் ஈடுபடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் உள்ள ஒவ்வொருவரின் வாழ்க்கை ஏற்றத்திற்கும் இந்த மக்கள்தொகைகணக்கெடுப்பு அவசியம் ஆகும். ஏனெனில் இந்த கணக்கெடுப்பில் உள்ள விவரங்களை ஆராய்ந்து அதற்கு ஏற்ப மத்திய அரசு புதிய செயல் திட்டங்களை வகுத்து செயல்படுத்தும். இதன்மூலம் தனிநபரின் வாழ்க்கையில் பொருளாதார ரீதியிலாக பெரும் மாற்றத்தைக் காண முடியும்.

எனவே, அரசு அலுவலர்கள் தங்களது வீட்டிற்கு வரும் போது அவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு உரிய விளக்கத்தை அளித்து ஒத்துழைப்பை நல்கிட வேண்டும் என்று அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். வீட்டிற்கு அலுவலர்கள் வரும் போது நீங்கள் இல்லை என்றாலும் பரவாயில்லை. வேறு நாட்களிலும் அரசு அலுவலர்கள் வருகை தருவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்நாடகாவில் 16 வயதுக்குட்பட்டவர்கள் சமூக வலைத்தளங்கள் பயன்படுத்த தடை



பெங்களூரு:

16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்ததடைவிதிக்கப்படுவதாக கர்நாடகா மாநில முதலமைச்சர் சித்தராமையா அதிரடியாக அறிவித்துள்ளார்.

கர்நாடக மாநில சட்டப்பேரவையில் 2026–2027– ஆம் நிதியாண்டிற்கான மாநில பட்ஜெட்டை கர்நாடகா மாநில முதலமைச்சர் சித்தராமையா தாக்கல் செய்து உரையாற்றினார். அப்போது சில முக்கிய திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டுள்ளார்.

சட்டப்பேரவையில் பேசிய முதலமைச்சர் சித்தராமையா, "ஐஐஎஸ்சியில் (IISC) கீழ் செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்நுட்பப் பூங்கா, இஸ்ரோ மற்றும் கியோனிக்ஸ் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து செயற்கை நுண்ணறிவுக் கண்டுபிடிப்பு மண்டலம் மற்றும் பெங்களூரு ரோபோட்டிக்ஸ் வளாகம் அமைக்கப்படும். தற்போது செல்போன் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில் கர்நாடகா மாநிலத்தில் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுகிறது.

இதற்கென மாநில சட்டப்பேரவையில் முறையான சட்ட முன்வடிவு தாக்கல் செய்யப்படும். குழந்தைகளின் எதிர்மறையான தாக்கத்தைத் தடுக்கவும், குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டும் அரசு இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

அதேபோல் மேகதாது அணைதொடர்பாகவிரிவான திட்ட அறிக்கை தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும் என்று கர்நாடகா நிதிநிலையில் அறிவிக்கப்பட்டிருப்பது தமிழ்நாட்டு விவசாயிகளைக் கவலையடையச் செய்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு டெல்லியில் நடந்த உலகளாவிய செயற்கை நுண்ணறிவு மாநாட்டில் பங்கேற்று பேசிய மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் ரயில்வேத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், "இந்தியாவில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர்களின் வயது அடிப்படையில் கட்டுப்பாடுகளை விதிப்பது குறித்து இந்திய சமூக வலைத்தள நிறுவனங்களின் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

மேலும், செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தின் மூலம் சமூக வலைத்தளங்களை மிகவும் பாதுகாப்புடன் குழந்தைகள் கையாளும் வகையில் புதிய தொழில்நுட்பங்கள் உருவாக்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஆஸ்திரேலியா அரசு 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை விதித்திருந்தது. உலகில் குழந்தைகள் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தத் தடை செய்த முதல் நாடு ஆஸ்திரேலியா என்பது குறிப்பிடத்தக்கது.

# தொடர்ந்து சரியும் தங்கம் விலை சவரன் ரூ.1,280 குறைவு





சென்னை: 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை இன்று ரூ.1,280 குறைந்து ஒரு சவரன் ரூ. 1,19,680–க்கு விற்பனையாகிறது.ஈரான், இஸ்ரேல் போர் காரணமாக உலக நாடுகளிடையே வர்த்தக பிரச்சனை அதிகரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக, ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியுள்ள நிலையில் கடல் வழி வணிகத்தில் சிக்கல் ஏற்படும் என பல்வேறு நிறுவனங்கள் அறிவித்திருக்கின்றன. பொதுவாக போர் நடைபெற்றால், முதலீட்டாளர்கள் பாதுகாப்பான முதலீட்டை தேர்ந்தெடுக்கும் நோக்கில், தங்கத்தின் மீது முதலீடு செய்வர். இப்போது போர் காரணமாக பங்குச்சந்தை வீழ்ச்சியடை ந்து வருகிறது. அதே நேரத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்து வருகிறது. இதனால் தங்கம் விலை கணிசமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், போர் தொடங்கிய முதல் நாளில் தங்கம் விலை உச்சம் தொட்டது. பின்னர் அடுத்தடுத்த நாட்களில் விலை குறைந்து வருகிறது.

ஆபரண தங்கத்தின் விலை நேற்று (மார்ச் 5) கிராமுக்குரூ.80குறைந்து ஒரு கிராம் ரூ. 15,120க்கு விற்கப்பட்ட நிலையில், இன்று (மார்ச் 6) ரூ.160 குறைந்து ஒரு கிராம் ரூ. 14,960–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதன்படி, நேற்று சவரனுக்கு ரூ.640, குறைந்து ரூ. 1,20,960க்கு விற்கப்பட்ட நிலையில், இன்று ரூ. 1,280 குறைந்து ஒரு சவரன் ஆபரண தங்கம் ரூ. 1,19,680–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை

(மார்ச் 6) ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ. 290–க்கு விற்கப்படுகிறது. அதன்படி, கிலோவுக்கு ரூ. 5,000 குறைந்து, ஒரு கிலோ வெள்ளி ரூ. 2,90,000க்கு விற்கப்படுகிறது.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி இயந்திரம் விளாத்திகுளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார்



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 13வது வார்டு,11வது வார்டு பவுண்ட் தெருவில் ரூ- 24 லட்சம் மதிப்பீட்டில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி இயந்திரம் அமைப்பதற்கான பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற சட்டவிதிகள் ஆய்வு குழு தலைவர், தலைமை செயற்குழு உறுப்பினர் மார்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் எட்டையாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் மகாராஜன் கோவில்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் நவநீத கண்ணன் விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன் விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல் எட்டையாபுரம் பேரூர் கழகச் செயலாளர் பாரதிகணேசன் மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் JCB- சங்கரநாராயணன் வடக்கு மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர் சௌந்தரராஜன் பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் கதிர்வேல் மாவட்ட பிரதிநிதி கல்லடிவீரன் எட்டயபுரம் பேரூர் கழக துணை செயலாளர்கள் முத்துமுனியசாமி,மாரியப்பன் இசக்கியம்மாள் பேரூர் கழகபொருளாளர் தெய்வேந்திரன் வார்டு உறுப்பினர்கள் மணிகண்டன், மாதவன்,விஜயலட்சுமி தங்கம்மாள் வார்டு செயலாளர்கள் முத்துவேல்,சின்னப்பர், ராமர், மயில்ராஜ், பிச்சை,பச்சிராஜன் அருள்சுந்தர், பிச்சுமணி எட்டயபுரம் பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர் சதீஷ்குமார் மகளிர் அணி மஞ்சமாதேவி, முருகலட்சுமி மகளிர் அணி துணைச் செயலாளர் பரமேஸ்வரி தகவல் தொழில்நுட்ப அணி அர்ச்சனா,காவியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை பேரூராட்சியில் அம்ரூத் 2.0 "திட்டத்தின் மூலம் 12 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டு பணிகளை முதலமைச்சர் மு .க. ஸ்டாலின் காணொளி காட்சிகள் வாயிலாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் தென்கரை பேரூராட்சி தலைவர் நாகராஜன் தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றி வைத்தார் தென்கரை பேரூராட்சி வார்டு கவுன்சிலர் தேவராஜ், துணைத் தலைவர் ராதா செயல் அலுவலர் {பொறுப்பு) சுருளி வேல், உதவி செயற்பொறியாளர் மணிமாறன் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மணக்குடி அலையாத்தி நர்சரியில் பள்ளி மாணவர்களுக்கான அலையாத்தி காடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் முனைவர். அன்பு உத்தரவின்படியும், முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் நெறிமுறை படியும், உதவி வன பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குனர். ஸ்ரீவல்சன் அறிவுரையின்படியும், பூதப்பாண்டி வனச்சரக அலுவலர். அன்பழகன் தலைமையில் மணக்குடி அலையாத்தி நர்சரியில் பள்ளி மாணவர்களுக்கான அலையாத்தி காடுகள் குறித்த விழிப்பு ணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் வனவர்கள் அசோக்,மணிகண்டன், பாலச்சந்திகா உடன் பூதப்பாண்டி வனப்பணியாளர்கள், ஆசிரியர் அலெக்ஸ் ஒருங்கிணைப்பில் அரசு பள்ளி மாணவர்கள் 200 பேர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். மேலும் பறவைகள் ஆராய்ச்சியாளர் முனைவர் பாலச்சந்தர் இளம் ஆராய்ச்சியாளர்கள் அபராஜிதா மற்றும் வைஷாலி, மனோன்மணியம் பல்கலைக் கழக அலையாத்தி ஆராய்ச்சியாளர். ரமேஷ் பாபு, பசுமை தோழர் சாம்சன், ஆசிரியர்கள் பாலகிருஷ்ணன், பொன்காசி ஆகியோரும் அலையாத்தி காடுகள் அதன் உயிர்பன்மை குறித்தும் பேரலைகளில் இருந்து பாதுகாக்கப்படுவது, கடல் அரிப்பு தடுப்பது, மீன், இறால், நண்டு, நீர்ப்பறவைகள் போன்ற உயிரினங்களின் பாதுகாப்பு மற்றும் இனப்பெருக்க ஸ்தலமாக விளங்குவது அலையாத்தி நாற்றங்கால் பராமரிப்பு , அலையத்தி மரங்களை பற்றிய விழிப்புணர்வை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் விளக்கினர். மாணவர்கள் அலையாத்தி காடுகள், இயற்கை, மற்றும் உயிரினங்களை பாதுகாப்போம் என்று உறுதி கூறினர். மாணவர்களுக்கு அலையாத்தி பற்றிய கைப் பிரதி, சணல் பை கிட் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் பாடியந்தல் கிராமத்தில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோவில் மற்றும் பாஞ்சாலி அம்மன் கோவில்கள் புனரமைக்கப்படுவதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெற்றது.மாரியம்மன் கோவில் மற்றும் பாஞ்சாலி அம்மன் கோவில்கள் சிதலமடைந்து காணப்பட்டதால் ஊர் பெரியோர்கள் மற்றும் கிராம மக்களின் முன்னெடுப்பில் பெரிய பொருட்செளவில் சிதலமடைந்த கோவில்களை இடித்து அப்புறப்படுத்தி விட்டு அவ்விடத்தில் புதிதாக கோவில்கள் கட்டப்பட்டு முன் வாயிலில் ராஜகோபுரம் அமைப்பதற்கான பூமி பூஜை ஊர் பெரியவர்கள் மற்றும் கிராம மக்கள் முன்னிலையில் நடைபெற்றது

## ஈரோட்டில் ஈ.வி.கே.சம்பத் நூற்றாண்டு விழா: திருவுருவச் சிலைக்கு காங்கிரஸ் பொதுச்செயலாளர் அரிமா. அன்பழகன் மலர் தூவி மரியாதை



தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மூத்த தலைவரும், 'சொல்லின் செல்வர்' என்று போற்றப்படுபவருமான ஈ.வி. கே.சம்பத் அவர்களின் 100-வது பிறந்தநாள் நூற்றாண்டு விழாநேற்று ஈரோட்டில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள சம்பத் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் அரிமா. அன்பழகன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

திராவிட இயக்கத்திலும், பின்னர் காங்கிரஸ் பேரியக்கத்திலும் முக்கியத் தூணாக விளங்கிய ஈ.வி.கே.சம்பத், தனது கண்ணீர் குரலாலும் ஆழமான கருத்துக்களாலும் அறிஞர் அண்ணாவால் 'சொல்லின் செல்வர்' எனப் புகழப்பட்டவர்.

அவரது நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற இந்த நிகழ்வில், மறைந்த தலைவரின் அரசியல் ஆளுமை மற்றும் மக்கள் நலனுக்காக அவர் ஆற்றிய அரும்பணிகள் நினைவு கூறப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் கலந்து கொண்டு அவருக்குப் புகழ் வணக்கம் செலுத்தினர். மேலும், ஈ.வி. கே.சம்பத் அவர்களின் கொள்கைகளையும் தியாக வரலாற்றையும் இன்றைய இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என இந்த நிகழ்வின் போது வலியுறுத்தப்பட்டது.

## வேப்பூர் அருகே ஸ்ரீ ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியில் விளையாட்டு மற்றும் கலாச்சார விழா

### வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு




கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள ஐவதுகுடியில் இயங்கி வரும் ஸ்ரீ ஐயப்பா மற்றும் ஐயப்பா பாலிடெக்னிக் கல்லூரியின் 2025-2026 ஆம் கல்வி ஆண்டிற்கான விளையாட்டு மற்றும் கலாச்சார விழா கல்லூரி வளாகத்தில் உள்ள யோகா அரங்கத்தில் நேற்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் வெங்கடேசன் அனைவரையும் வரவேற்றார். அறக்கட்டளையின் நிலைய அறங்காவலர்கள் ராஜேந்திரன், ஆர். சரவணன் விழாவிற்குத் தலைமை வகித்துத் தலைமையுரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் கல்லூரியின் ஆலோசகர்கள் பாலகிருஷ்ணன் மற்றும் குமார் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களை வாழ்த்திச் சிறப்புரையாற்றினர். விழாவினைத் துறைத் தலைவர் மோகனப்பரி தொகுத்து வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, கல்லூரியில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு சிறப்பிடம் பிடித்து வெற்றி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் நிர்வாக அறங்காவலர்கள் ராஜேந்திரன், ஆர். சரவணன் ஆகியோர் பரிசுகளை வழங்கிப் பாராட்டிப் பேசினர்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை விழா ஒருங்கிணைப்பாளர்கள் செந்தாமரைக்கண்ணன், ராஜாராமன் உள்ளிட்டோர் சிறப்பாகச் செய்திருந்தனர். முடிவில், ஸ்ரீ ஐயப்பா கல்லூரியின் முதல்வர் முனைவர் புனிதவதி மோகன் நன்றியுரையாற்றினார். இதில் ஏராளமான மாணவர்களும், பேராசிரியர்களும் கலந்துகொண்டனர்.



சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக கனவுகள் மெய்படும் "என் ஊர் என் கனவு" திட்டத்தின் கீழ் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்டஆவணத்தினைவெளியிட்டதைத்தொடர்ந்துவீட்டுவசதி,மதுவிலக்குமற்றும்ஆயத்தீர்வைத்துறைஅமைச்சர்சு.முத்துசாமிஈரோடுமாவட்டத்திற்கு "என் ஊர் என் கனவ" திட்டத்தின் கீழ் இலக்கு 2030 உத்திகள் மற்றும் செயல் திட்ட ஆவணத்தினை வெளியிட்டார்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நடைபெறும் மையங்களில் கலெக்டர் க. இளம்பகவத் ஆய்வு



தமிழ்நாட்டில்2025-2026-ஆம்கல்வியாண்டிற்கான 12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.இதன் ஒருபகுதியாக,இன்று (05.03.2026) தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத், தேர்வு மையங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

புதுக்கோட்டையில்உள்ளT.D.T.A.P.S.பெரியநாயகம் மேல்நிலைப்பள்ளி தேர்வு மையத்திற்குச் சென்ற மாவட்ட ஆட்சியர், அங்கு மாணாக்கர்கள் அமைதியான முறையில் தேர்வு எழுதுவதை நேரில் பார்வையிட்டார். தொடர்ந்து அவர், வல்லநாடு வி. றி.வி.டி அரசு மேல்நிலைப்பள்ளி மையத்தில் மாணாக்கர்கள் தேர்வு எழுதுவதை பார்வையிட்டார். ஆய்வின் போது, தேர்வு அறைகளில் போதிய வெளிச்சம், காற்றோட்டம் மற்றும் குடிநீர் வசதிகள் செய்யப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தார்.

தேர்வுகள் முறைகேடுகளின்றி நடப்பதை உறுதி செய்ய நியமிக்கப்பட்டுள்ள பறக்கும் படைகளின் செயல்பாடுகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். மாணாக்கர்களுக்குத் தேவையான மருத்துவ முதலுதவி மற்றும் இதர சுகாதார ஏற்பாடுகள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் பள்ளி கல்வித்துறை உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## திருக்கோவிலூர் ஒன்றியம் பாடிந்தல் கிராமத்தில் மாணவர்கள் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் ஒன்றியம் பாடிந்தல் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் (2026 - 2027) கல்வி ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை நடைபெற்று வருகிறது மாணவர்கள் சேர்க்கைக்கான விழிப்புணர்வு பேரணி இன்று மார்ச் 9 நடைபெற்றது, இதில் ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் உதவி ஆசிரியர்கள் மற்றும் எஸ் எம் சி (SMC) குழு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணியை தொடங்கி வைத்தனர். இவ்விழிப்புணர்வு பேரணி பள்ளியில் தொடங்கி ஊர் முழுவதும் பேரணியாக வலம் வந்து மக்களிடையே அரசு பள்ளியின் சிறப்புகளை எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி துண்டு பிரசுரங்கள் வழங்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர் அரசு பள்ளி மாணவ மாணவிகள்.

நமது பள்ளியின் சிறப்புகள்:-

1. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை என்னும் எழுத்தும் பயிற்சியுடன் கூடிய கல்வி கற்பிக்கப்படுகிறது

2.ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உயர் தொழில்நுட்ப ஆய்வகத்தில்(HI TECH LAB)கணினி பயிற்சி கொடுக்கப்படும்

3. எஸ் சி (SC),எம் பி சி (MBC),மாணவிகளுக்கு அரசு வழங்கும் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது

4.ஒவ்வொரு மாணவர்களுக்கும் நான்கு இணை சீருடைகள்,புத்தகங்கள், பயிற்சி ஏடுங்கள்,காலணிகள் வழங்கப்படுகிறது 5. காற்றோட்டமான வகுப்பறைகள்,

மாணவிகளுக்கு புதியதாக கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளன

6.ஒவ்வொரு ஆண்டும் கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறது

7.கல்வி இணைச் செயல்பாடுகள், ஓவியம்,பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, போன்றவற்றுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது

8.6, 7, 8, வகுப்பு மாணவர்களுக்கு தற்காப்பு பயிற்சியான கராத்தே, சிலம்பம் கற்றுத் தரப்படுகிறது

9. நிரந்தரமான ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியே நிரந்தர மற்றும் திறமையான ஆசிரியர்கள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம்: பெருமாள்புரம் அருள்மிகு வெட்டிமுறிச்சான்இசக்கியம்மன்கோயில்கும்பாபிஷேகம் ஏப்ரல் 3 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், கும்பாபிஷேக கால்கோள் விழா இந்நிகழ்வில் கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் என்.தளவாய் சுந்தரம் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.



கன்னியாகுமரி சுற்றுலா தளத்தில் கன்னியம்பலம் மண்டபத்தில் இந்து அறநிலைத்துறை சார்பாக சுற்றுலா பயணிகள் கல் மண்டபத்தில் மதுபான குடிப்பதற்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த இந்து அறநிலை துறை அதிகாரிகளுக்கு காவல்துறை நண்பர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம் அப்பாவி ஏழை தொழிலாளர்கள் கல் மண்டபத்தை சுற்றி வியாபாரம் நடத்தியது சட்டவிரோதமாக இருந்ததாக வியாபாரம் செய்த 13 கடைகளை அப்புறப்படுத்தியஇந்துஅறநிலைத்துறைஒருபகுதியைமட்டும்ஆக்கிரமிப்புஅகற்றாமல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதி அரசரின் உத்தரவை மதிக்காமல் தாண்டோடித்தனமாக செயல்படும் இந்து அறநிலை துறை அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) மாவட்ட கமிட்டி சார்பில் நீதிமன்றத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாவட்ட நிர்வாகத்திற்கும் இந்து அறநிலை துறை அதிகாரிகளுக்கும் இதன் மூலம் தெரிவித்துக் கொண்டனர்.

## தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவில் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்குசாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் குறித்து ஆட்சியர் கமல் கிஷோர் ஆய்வு

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோமதி அம்பாள் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, நகராட்சி நடுநிலைப்பள்ளி , வடக்கு குருவிகுளம்அரசு மேல்நிலைப்பள்ளி, கலிங்கப்பட்டிஅரசு மேல்நிலைப்பள்ளி, வன்னிக்கோனேந்தல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, களப்பாகுளம் அன்னை வேளாங்கண்ணி மேல்நிலைப்பள்ளி ஆகிய வாக்குச்சாவடி மையங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ. கே.கமல்கிஷோர் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் மின்சார வசதி, குடிநீர் வசதி, கழிவறை வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்வு தளம் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஆ.அனிதா, திருவேங்கடம் வட்டாட்சியர் செல்வக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### கோவை சங்கனூர் சாலை, நேதாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள,

## ஸ்ரீ அரவிந்த அன்னை நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியின் 2026 ம் ஆண்டுக்கான ஆண்டு விழா நிகழ்ச்சி

### இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியை, பள்ளியின் கரஸ்பான்டட் பால சுந்தரம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்

கோவை சங்கனூர் சாலை, நேதாஜி நகர் பகுதியில் அமைந்துள்ள, ஸ்ரீ அரவிந்த அன்னை நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியின் 2026 ம் ஆண்டுக்கான ஆண்டு விழா நிகழ்ச்சிகிரிநித்ஹாலில் நடைபெற்றது.

இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியை, பள்ளியின் கரஸ்பான்டட் பால சுந்தரம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை துணை ஆட்சியர் மணிமேகலை குத்துவிளக்கேற்றி வைத்து ஆண்டு விழாவை துவக்கி வைத்தார்.

சுதர்சன் கல்லூரியின் இயக்குனர்ஹரிஸ்பாலசுந்தரம் வரவேற்புரை வழங்கினார்..தொடர்ந்து பள்ளியின் செயல்பாடுகள் குறித்தும், பள்ளியின் வரவு செலவுகளை ஆண்டறிக்கையாக,பள்ளியின் தலைமை ஆசிரியை பிரியா வாசித்தார். தொடர்ந்து சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட கிருஷ்ண ராஜ், டிஎன்.பி.எம்.ஹெச்.எஸ். என் அசோசியேஷன் மற்றும்

கோவை மக்கள் நல்லுறவு நலச்சங்கத்தின் தலைவர் இ.சுக்குருல்லா பாபு ஆகியோர் சிறப்புரையற்றினார். இதனை

தொடர்ந்து பள்ளி குழந்தைகளின் பல்வேறு, கலை, இயக்கிய நாடகங்கள், நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது இதில் சுட்டி குழந்தைகள் தங்களது, குழு மற்றும் தனித்திறன்களை வெளிபடுத்தினர். இதனை கண்ட மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் என பலரும் கைகளை தட்டி ஆரவாரம் செய்து, உற்ச்சாக படுத்தினர். இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியில்,யோகேஸ்வரி, சங்கீதா ராதாகிருஷ்ணன், வைஸ்ணவி, ஸ்டெல்லா கீதா, வசந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் அமைந்துள்ள சர்தார் ராஜா பொறியியல் கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக தமிழ் தாய் வாழ்த்துடன் விழா இனிதே துவங்கியது. தொடர்ந்து நம் நாட்டின் பண்பாட்டினையும் கலாச்சாரத்தினையும் வலியுறுத்து விதமாக குத்து விளக்கு ஏற்றப்பட்டது.

இவ்விழாவானது கல்லூரியின் தலைவர் பொறியாளர் ஜீசஸ் ராஜா அவர்களின் வழிகாட்டுதலின் படி நடைபெற்றது. இவ்விழாவிற்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் ஜெயக்குமார் தலைமை வகித்தார் நிர்வாக இயக்குனர் பேராசிரியர் கனகபாண்டியன் முன்னிலை வகித்தார். இந்த விழாவின் சிறப்பு விருந்தினர்களாக சுரண்டை காமராஜர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இயற்பியல் துறை தலைவர் முனைவர் அருள் முகிலன் மற்றும் ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியின் இயற்பியல் துறையின் உதவி பேராசிரியர் சாய் கௌரி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு அறிவியல் சிந்தனைதற்போதைய அறிவியல் படைப்புகள் மற்றும் ஆராய்ச்சிகள் குறித்து மாணவர்கள் புரியும் வகையில் எளிமையாக விளக்கி கூறினார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் வினாடி - வினா, தொழில்நுட்ப காணொளி நிகழ்வில் மாணவர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு 30-க்கும் மேற்பட்ட புதுமையான படைப்பாற்றல் மிக்க அறிவியல் கண்டுபிடிப்புகளை உருவாக்கி காட்சிப்படுத்தினர். இந்த நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ மாணவிகள் துறை தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி நிறைவில் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவடைந்தது.

## கோவை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் ஆண்டுவிழா

### முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை சாஸ்த்ரா பல்கலைக்கழக இயக்குநர் சுதா சேஷய்யன் வழங்கினார்




கோவை கவுண்டர் மில்ஸ் பகுதியில் உள்ள, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் ஆண்டுவிழா அக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி தலைமையுரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் வே. சங்கீதா ஆண்டறிக்கை வாசித்தார். முன்னதாகக் கல்லூரியின் மாணவர் பேரவைத் தலைவர் செல்வி எஸ். தொம்னிக் லித்வினா வரவேற்புரையாற்றினார் இவ்விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தரும் சென்னை, சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் இயக்குநருமான டாக்டர் சுதா சேஷய்யன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுச்சிறப்புரையாற்றினார்.அவர்தம் உரையில் கூறியதாவது.. "மாணவ - மாணவியா் தங்களின் பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டும் என்றும் கடமையிலிருந்து பின்வாங்காமல் சவால்களை மகிழ்ச்சியுடன் எதிர்கொண்டு எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். ஒருவர் நலமுடன் இருப்பது என்பது உடல், மனம், சமுதாயம், ஆன்மீகம் ஆகிய நான்கிலும் நலமுடன் இருப்பதையே குறிக்கும் என்றும் நேரமேலாண்மை மனஅழுத்தத்தைக் குறைக்கும் என்றும் குறிப்பிட்டார். பெற்றோர்கள் மற்றும் குடும்ப உறுப்பினா்கள் செய்த உதவிகளையும் ஆசிரியர்களின் பங்களிப்பையும் நாள்தோறும் நினைத்துப் பார்ப்பதுடன் புனிதம் மிக்க இந்திய மண்ணில் பிறந்ததை நினைத்துப் பெருமைப்பட வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

ஆய்வுகளில் சிறந்து விளங்கிய பேராசிரியா்களுக்குச் சிறப்பு விருந்தினா் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார். முதல் மதிப்பெண் பெற்ற மாணாக்கா்களுக்குச் சான்றிதழ்களையும் சிறந்த துறை, சிறந்த ஆராய்ச்சித்துறை ஆகியவற்றுக்கான சுழற்கோப்பைகளையும் நூல்கள், ஆய்விதழ்களில் கட்டுரைகளை எழுதிய பேராசிரியா்களுக்குச் சான்றிதழ் மற்றும் ஊக்கத்தொகைகளையும் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநா் டாக்டர்சி.ஏ.வாசுகி வழங்கினார். அதனைத் தொடர் ந்து மாணவர் பேரவையின் செயலர் செல்வன் பவன் கிருஷ்ணன் நன்றியுரையாற்றினார். விழாவின் நிறைவில் மாணாக்கா்களின் கண்கவர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

### செயற்கை நுண்ணறிவின் மூலம் எதிர்காலத்தை வடிவமைத்தல் என்ற தலைப்பில்

## நுண்ணறிவு அமைப்புகள் பற்றிய மாநாடு 2026 எனும் தலைப்பில் கோவையில் நடைபெற்றது

கோவை அரசூர் பகுதியில் உள்ள கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரியின் நுண்ணறிவு அமைப்புகள் மற்றும் தரவு அறிவியல் புலத்தின் சார்பில் செயற்கை நுண்ணறிவின் மூலம் எதிர்காலத்தை வடிவமைத்தல் என்ற தலைப்பில் நுண்ணறிவு அமைப்புகள் பற்றிய மாநாடு 2026 கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நுண்ணறிவு அமைப்புகள் மற்றும் தரவு அறிவியல் புலத்தின் முதன்மையர் முனைவர் பிரதீபா வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரி முதல்வர் முனைவர் கீதாதலைமை உரையாற்றினார். தொழில்நுட்பப் புதுமையின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் புதுமையான எதிர்காலத்திற்கு ஏற்றவாறு தயாராக வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பெங்களூர் மைக்ரோசாப்ட் அபிவிருத்தி வழிகாட்டி கமல் எஸ் உரையில் மாணவர்களின் அன்றாட வாழ்விலும் தொழில்வாழ்க்கையிலும் செயற்கை நுண்ணறிவுக் கல்வி துணையாக அமைகிறது என்பதை விளக்கினார். கோவை டிஜிட்டல் பிரசிடியோ நிறுவனத்தின் விநியோக இயக்குநர் ராம்குமார் குப்புச்சாமி ஆற்றிய சிறப்புரையில் நுண்ணறிவுக் கட்டமைப்புகள் தொழில்துறையில் ஏற்படுத்தும் மாற்றங்களைப் பற்றி எடுத்துரைத்தார்.

மைக்ரோசாப்ட் குறித்த அமர்வில் சென்னை டாடாஆலோசனைமைய உதவி ஆலோசகர் சரவணன் கணேசன் உரையில் நிறுவனத் தரத்திலான ஏஐ முகவர்களை உருவாக்கும் முறைகளைப் பற்றி விளக்கினார். கோவை டர்பி இங்க் நிறுவனத்தின் கணக்குப் பொறுப்பாளர் கார்த்திக் இளங்கோ பேசுகையில் அசர் தளத்தின் மூலம் ஏஐ தீர்வுகளை வடிவமைத்துச் செயல்படுத்தும் நடைமுறைகளைப் பற்றி எடுத்துரைத்தார்.

கூகுள் பற்றிய அமர்வில் சர்வதேசப் பேச்சாளரும், செயற்கை நுண்ணறிவு வடிவமைப்பாளருமான கீதா காக்ராணி உரையாற்றினார். ஜெமினி மற்றும் வெர்டிக்ஸ் ஏஐ மூலம் விரைவான செயலி உருவாக்கம் குறித்து விளக்கினார். பெங்களூர்,ஏ டபிள்யூ எஸ் சமூக உருவாக்க நிறுவனத்தின் தீர்வு வல்லுநர் ராகவேந்திரன் நுண்ணறிவு அமைப்புகளின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து மாணவர்களுக்குஎடுத்துரைத்தார். கோவை பெசிலிட்ரான் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிறுவனர் சித்தார்த் கெங்காதரன் நுண்ணறிவு அமைப்புகளின் கட்டமைப்பு அடிப்படைகளைப்பற்றிமாணவர்களிடம் விளக்கினார்.

இன்றைய கல்வி மற்றும் தொழில்துறை சூழலில் மாணவர்கள் உண்மையான உலகத் திட்டங்களில் செயற்கை நுண்ணறிவைத் திறம்பட ஒருங்கிணைக்கும் திறன்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றனர்.அந்தநிலையைக் கருத்தில் கொண்டு இம்மாநாடு புதுமைத்திறன் வேலைவாய்ப்புத் தகுதி மற்றும் தொழில்த் தயார்நிலை ஆகியவற்றை மேம்படுத்தத் தேவையான அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்கியது.

நுண்ணறிவு அமைப்புகள் மற்றும் தரவு அறிவியல் புலம் ஒருங்கிணைத்த இந்த நிகழ்வில் 700 க்கும் மேற்பட்டமாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.



## மாநில அளவிலான மல்லர் கம்பம் போட்டி: ஈரோடு மாணவிகள் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை

தமிழ்நாடு மல்லர் கம்ப கழகத்தின் திருச்சியில் உள்ள திருஇருதய மேல்நிலைப்பள்ளியில் 12-வது மாநில அளவிலான மல்லர் கம்பம் போட்டி தமிழ்நாடு மல்லர் கம்ப கழக நிறுவனத்தலைவர் உலகதுரை தலைமையில் கௌரவத் தலைவர் டாக்டர்.அரவிந்தன்,செயலாளர் துரை செந்தில்குமார், துணைத்தலைவர் சாந்தி மனோகரன் மற்றும் தொழில்நுட்ப தலைவர் டாக்டர்.நடராஜன் ஆகியோர் முன்னிலையில் போட்டிகள் நடத்தப்பட்டன. மல்லர் கம்பம், மல்லர் கயிறு மற்றும் தொங்கும் மல்லர் கம்பம் என மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இந்தப் போட்டியில், தமிழகம் முழுவதிலும் இருந்து 600-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். இதில் ஈரோடு மாவட்ட மல்லர் கம்ப கழகம் சார்பில் கலந்து கொண்ட 12 வயதிற்கு உட்பட்ட மாணவிகள் பிரிவில் தனுஷியா, மஹாவர்ஷினி, மகிமா, பிரதிக்ஷா மற்றும் ஹரிணி ஆகியோர் தங்களது திறமையை வெளிப்படுத்தி மூன்றாம் இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர். மாநில அளவில் பதக்கங்களை வென்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த இந்த மாணவிகளை, ஈரோடு மாவட்ட மல்லர் கம்ப கழகச் செயலாளர் கீதா, மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பாராட்டித் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.





தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி (05.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையத்தில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில், ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் சத்திஅத்தாணிபவானி சாலையினை இருவழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி வலுப்படுத்துதல், சிறுபாலங்கள் அகலப்படுத்துதல், சிறுபாலங்கள், வடிகால் மற்றும் தடுப்புச் சுவர் கட்டுதல் உள்ளிட்ட பணிகளை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.

## விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி மாவட்ட துணைச் செயலாளராக வழக்கறிஞர் பரந்தாமன் நியமனம்

### வி.சி.க தலைவர் தொல். திருமாவளவன் அறிவிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுரா ந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தின் ஆனைகுன்னம் ஊராட்சியில் இருந்து தலைவர் எழுச்சித்தமிழர் அவர்களின் கொள்கை கோட்பாட்டினை முன்னெடுத்துச் செல்ல. சென்னை விருகம்பாக்கத்தில் சட்டமன்றத் தொகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பல பொறுப்புகளில் வகித்து வந்த சென்னை உயர் நீதிமன்றத்தின்வழக்கறிஞர்க.பரந்தாமன்இவர்களின் கட்சிப் பணியினை பாராட்டி களப்பணியினை துரிதப்படுத்திட விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் மாவட்ட துணைசெயலாளராககட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அறிவிப்பு செய்துள்ளதை அடுத்து சமூக வலைதளங்களில் அரசியல் பிரமுகர்கள் சமூக செயல்பாட்டாளர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்த வண்ணம் உள்ளனர்

### அமைச்சர் சு.முத்துசாமி மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில்

## 67 பயனாளிகளுக்கு ரூ.68.20 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று (06.03.2026) வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறைஅமைச்சர் சு.முத்துசாமி 67 பயனாளிகளுக்கு ரூ.68.20 இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். ஈரோடு மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு என எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள்.

அந்த வகையில் நேற்றைய தினம், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 67 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.1,01,800/- வீதம் என மொத்தம் ரூ.68,20,600/- இலட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார். ஈரோடு மாநகராட்சி துணை மேயர் வே.செல்வராஜ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






### தமிழக வெற்றி கழகம் சார்பில்

## தூத்துக்குடி மாவட்டத்தில் பிரச்சாரம் செய்வதற்காக வாகனத்தை த.வெ.க மாநில துணை பொதுச்செயலாளர் சுபத்ரா முருகன் கொடியசைத்து துவக்கி வைத்தார்



தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் உத்தரவின் பேரில் தமிழக வெற்றிக் கழகத்தினர் சட்டமன்றதேர்தல்பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி மாவட்ட தமிழக வெற்றிக் கழக தேர்தல் கண்காணிப்பாளர் தேர்தல் கண்காணிப்பாளர் ஜே.கே.ஆர். ஜே.முருகன் ஏற்பாட்டின் பேரில் இன்று தூத்துக்குடி மத்திய மாவட்டம் மற்றும் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கான பிரச்சார வாகனம் துவங்கி வைக்கப்பட்டது. இந்த பிரச்சார வாகனத்தை தமிழக வெற்றிக்கழக மாநில துணைப் பொதுச் செயலாளர் சுபத்ரா முருகன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். பின்னர் பொதுமக்களிடம் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதுடன் தமிழக வெற்றிக்கழக சின்னமான விசிலை வழங்கியும் பொதுமக்கள் குறைகளை தெரிவிப்பதற்கான விண்ணப்பத்தையும் வழங்கினர்.

அந்த பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் கடைகளில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதுடன் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜயின் ஸ்டிக்கரை ஒட்டினர் பின்னர் பொதுமக்களுக்கு தமிழக வெற்றி கழக சின்னமான விசிலை வழங்கியதுடன் தங்கள் பகுதியில் உள்ள குறைகளை தெரிவிக்க படிவங்களை வழங்கி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். மேலும் வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் அதிக வாக்கு வித்தியாசத்தில் தமிழக வெற்றி கழகம் வெற்றி பெற்று தலைவர் அரியணையில் ஏறுவார் தமிழக மக்களின் குறைகளை போக்க தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பாடுபடுவார் அந்தந்த பகுதி மக்களின் குறைகளும் தீர்க்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தேர்தல் கண்காணிப்பாளர்ஜே.கே.ஆர்.ஜே.முருகன் மற்றும் தூத்துக்குடி மத்திய மாவட்ட கழக செயலாளர் எஸ்.டி.ஆர். சாமுவேல் ராஜ் தெற்கு மாவட்ட கழக செயலாளர்வழக்கறிஞர்பிரைட்டர் புறநகர் மாவட்ட செயலாளர் மதன் உள்ளிட்ட தமிழக வெற்றி கழகநிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### அமைச்சர் சு.முத்துசாமி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில்

## 890 பயனாளிகளுக்கு ரூ. 13.09 கோடி மதிப்பிலான விலையில்லா வீட்டுமனை பட்டாக்களை வழங்கினார்

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அனைத்து மகளிரும் பயன்பெறும் வகையில் கட்டணமில்லா விடியல் பயணம், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி திட்டம், இல்லத்தரசிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் மகளிர் உரிமைத்திட்டம், மலையிலிருந்து வரும் நீரை பொதுமக்களுக்கும் விலங்களுக்கும் பயன்பெறும் வகையில் அந்தியூர் தோனிமடுவு திட்டம், உயர்கல்வி செல்லும் மாணவ மாணவியர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டம், பள்ளி குழந்தைகளுக்கு சோர்வின்றி பயில முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல்பரிசு தொகுப்புடன் ரொக்கம் ரூ.3000/ வழங்கும் கல்வி திட்டம், போன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டு மனைப்பட்டா வழங்கப்படுகிறது. எனவே பொதுமக்கள் இத்தகைய அரசு நலத்திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என தெரிவித்தார்.

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி கோபிசெட்டிபாளையம் பகுதியை சேர்ந்த 757 பயனாளிகளுக்கு ரூ.11.36 கோடி மதிப்பிலான விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களையும், நம்பியூர் வட்டம் பகுதியை சேர்ந்த 133 பயனாளிகளுக்கும் 5.1.73 கோடி மதிப்பிலான விலையில்லா

வீட்டுமனைப்பட்டாக்கள் என மொத்தம் ரூ.13.09 கோடி மதிப்பிலான விலையில்லா வீட்டு மனைப் பட்டாக்களை 890 பயனாளிகளுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி. வெங்கடசலம், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்படதுறைசார்ந்தஅலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சமூகநல மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்



சிவகங்கைமாவட்டம் காரைக்குடிசாக்கோட்டை வட்டாரம். சிவகங்கைமாவட்டம் 107 கர்ப்பிணிகளுக்கு ஐந்து வகை உணவுஆகியவற்றுடன் சமுதாயவளைகாப்பு விழா. பர்மா காலனி சிவானந்தமஹாலில் காரைக்குடிசட்டமன்ற உறுப்பினர் எஸ். மாங்குடிதலைமையில் நடைபெற்றதுவளைகாப்பு நிகழ்வை தொடங்கிவைத்து வளைகாப்புக்கு தேவையான பொருட்களை அவர்களுக்கு வழங்கிஅதன் மூலமாக அவர்களுக்குஒருமகிழ்ச்சியை ஊட்டக்கூடிய இந்த விழாவை அரசு முன் நிறுத்திசெய்கின்றது- ஆண்டுதோறும் அதன் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறதுதான் ஒவ்வொருஆண்டுமாக நான்தொடர்ந்து இந்தவிழாவில் கலந்துகொள்வதில்மகிழ்ச்சிஅடைகிறே. ன் கர்ப்பிணிதாய்மார்கள்பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியைதருகிறது ஒருஎன்னையும் பெற்றதுஒருதாய் தான் என்வாழ்க்கையில்தொடர்வதற்கு ஒருதாய்தான் உதாரணம்அந்த 'அளவுக்குதாய்மார்கள்.

இந்தஅர்ப்பணிப்பை செய்வது போல் பெருமைக்குரியது அரசுபல்வேறுதிட்டங்களைமகளிர்கொடுக்கின்றதுஐந்தாண்டுகாலங்களில் நிறையதிட்ட ங்களை செய்துஉள்ளார்கள் நினைத்துக்கூட பார்க்க முடியாதபலதிட்டங்களை உங்களுக்குவழங்கி,யிருக்கிறார்கள் கர்ப்பிணிபெண்களுக்கு- எந்தஅளவுக்கு உங்களுக்குதேவையானஊட்டச்சத்துநீர் கருவுற்றகாலத்தில் இருந்துஉங்களை பாதுகாப்பத ற்கு அரசுஇருக்கின்றது கர்ப்பிணியாளர்களாகியஉங்களுக்கு செவிலியர்கள்பணியாளர்கள்உறுதுணையாக- இருப்பார்கள்உங்களை பாதுகாத்து க்கொண்டிருக்கிறார்கள்உங்கள்கவனித்திக்கொண்டிருக்கிறார்கள் அரசுகொடுக்க க் கூடியஅனைத்து திட்டங்களையும் உங்களுக்கு- கொடுத்து அந்த கருவுற்ற காலத்தில் இருந்து வந்த குழந்தை வளர்வதற்கு- தேவையானஅனைத்து வசதிகளையும் அரசு வழங்கு.கிறது அதற்கு 18000ரூபாய்அரசு உதவிபுரிகிறதுதகருவுற்றகாலத்தை மட்டும்அல்லஅதன் பிறகுஇந்தபிள்ளை ஆறுவயதுவரை அவர்களுக்கு தேவையானஅனைத்து,வசதிகளையும்- அதன்பிறகுபள்ளிக்கு செல்வதுசென்ற பிறகுகாலைச்சிற்றுண்டி. முதலமை ச்சர்அவர்களால்வழங்கப்படுகின்றது

எப்படிகாமராஜ் அவர்கள்மதிய உணவு திட்டத்தை கொடுத்தார்களோ என்றும்இந்ததிட்டம் பெயர்சொல்லிக் கொண்டிருகும் இது மட்டுமல்ல அந்த மாணவர்களுக்கு தேவையானஅடிப்படை கல்வி வசதிகள் அதன் பிறகு உயர் கல்வி செல்லும் பொழுது அவர்கள் படிப்பதற்குதேவையான புதுமைப்பெண் திட்டம்நான்முதல்ன்திட்டத்தின் மூலமாக பல்வேறுவளர்ச்சிதிட்டங்களை- முதலமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்கள் என்றுசட்டமன்றஉறுப்பினர்கூ றினார் இதில்குழந்தைவளர்ச்சித் திட்ட அலுவலர் மங்களநாயகி- மாவட்ட திட்ட அலுவலர் சண்முகப்பிரியா மருத்துவ அலுவலர் ஆனந்தராஜ் மற்றும் சரஸ்வதி சங்கராபுரம் ஒன்றிய கவுன்சிலர் சொக்கலிங்கம் உணவு பாதுகாப்பு அலுவலர் தியாகராஜன். கண்டனூர் பேரூராட்சி தலைவர்சங்கீதா செல்லப்பன்மற்றும்காரைக்குடிமாநகர காங்கிரஸ்தலைவர் சண்முகதாஸ்மற்றும் பொதுமக்கள்கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி (05.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், சிவசண்முகம் வீதி பகுதியில் சமுதாயக்கூடம் மற்றும் மின்நகர் பகுதியில் புதிய சறுக்கு (ஸ்கேட்டிங்) மைதானம் அமைக்கும் பணியினை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி (05.03.2026) அன்று ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், ஏளூரில் புதிதாக அமைக்கப்பட்ட தார்சாலையினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, கோபிசெட்டிபாளையம் சார்ஆட்சியர் சிவானந்தம் , சத்தியமங்கலம் நகர்மன்றத்தலைவர் ஜானகி ராமசாமி உட்பட பலர் உள்ளனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.